2403

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# கொடிக்கவி

(விளக்க உரையுடன்)



வெளியீடு:

☆

வடமாநிலச் சைவ இளைஞர் மா மன்றம்
யாழ்ப்பாணம்.

6 . 8 . 64
321

வெளியீடு—1.

உ

திருச்சிற்றம்பலம்

மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க

ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள்

அருளிச்செய்த

# கொடிக் கவி



உரையாசிரியர்
யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியூர்
சைவப் புலவர், சித்தாந்த பண்டிதர்
திரு. இ. செல்லத்துரை அவர்கள்

வெளியீடு:
வடமாநிலச் சைவ இளைஞர் மா மன்றம்
யாழ்ப்பாணம்.

முதற் பதிப்பு — 1-8-64.

பிரதிகள் : 300.

உரிமை: வட்டமாநிலச் சைவ இளைஞர் மாமன்றத்திற்கே.

கிடைக்குமிடம்:

காரியதரிசி,
வட்டமாநிலச் சைவ இளைஞர் மாமன்றம்,
12/2 அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

பதிப்பு

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
யாழ்ப்பாணம்.

★

விலை ரூபா ஒன்று

321

உ

சிவமயம்

# பதிப்புரை

சைவசித்தாந்த சாத்திரங்களுள் ஒன்ருய 'கோடிக்கவி' என்னும் இந்நூலைச் சைவ மக்களது சமய அறிவு விருத்திக்கு உறு துணையாக வெளியிடுகின்ரேம்.

இந்நூற்பிரதிகளாற் பெறப்படும் இலாபம் எமது கழக வளர்ச்சிக்கும் அதன் நற்பணிகளுக்கும் உபயோகிக்கப்படும் ஆதலால், சான்ருேர்கள் இந்நூலை விரும்பிப் பெற்றுத் தமக்கும் நமக்கும் பயன்படுவார்கள் என்னும் துணிவுடையேம்.

நமது கழக வளர்ச்சியிற் கருத்துடையராய், இந்நூலை வெளியிட்டுப் பயன்பெறுமாறு உரிமையளித்துதவிய உரையாசிரியர் அவர்களுக்கும், இதனை இந்துசாதனப் பத்திரிகை வெளியீட்டு மறுபிரசுரமாய்ப் புத்தக உருவில், அமைத்துதவிய சைவப் பிரகாச அச்சகத்தாருக்கும் எமது நன்றி என்றுமுரித்து.

யாழ்ப்பாணம். வடமாநிலச் சைவஇளைஞர் மாமன்றம்

16—7—64.

உ
சிவமயம்

# உரையாசிரியர் முன்னுரை

சைவ சமயத்தின் தனிப் பேரியல்பினை விளக்கும் மெய் கண்ட சாத்திர நூல்கள் பதினான்கினுள் **கொடிக்கவியும்** ஒன்று, இந்நூலைச் சந்தானாசாரியருள் நாலாமவராகிய உமாபதி சிவாசாரியார் அருளினார்.

**ஆசிரியர் வரலாறு**

உமாபதி சிவாசாரியார் 14-ம் நூற்றாண்டில் வசித்தவர்; கொற்றவன் குடியில் தில்லைவாழ் அந்தணர் குலத்தில் அவதரித்து, மறைஞானசம்பந்தருக்குச் சீடரானவர்; சித்திரை அத்தத்தில் முத்திபெற்றவர். பெற்றான்சாம்பானுக்கும் முள்ளிச் செடிக்கும் முத்தி கொடுத்ததுவும், **சிதம்பரத்தில் ஏறாது நின்ற கொடியைக் கொடிக்கவிபாடி ஏறச்செய்ததுவும்,** சிதம்பர மான்மியத்துள் ஒன்றாய கோயிற் புராணத்தை இறைவனது குறிப்பறிந்து அரங்கேற்றியதுவும் இவரது திருவருட்பேற்றின் சிறப்பினை விளக்கும் அற்புதங்களாம். சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா போற்றிப்பஃறொடை, **கொடிக்கவி,** நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டு (மெய்கண்ட சாத்திர) நூல்களும் இவரால் இயற்றப் பெற்றவை; சித்தாந்த அட்டகம் என வழங்கப்படுபவை.

**நூல்வரலாறு**

மறைஞானசம்பந்தர் தமக்கு மாணவனாக விரும்பிய உமாபதி சிவாசாரியரது பக்குவ நிலையைப் பரிசோதிக்க விரும்பி, நெசவாளர் சேரிக்குச் சென்று அவர்கள் வார்த்த கூழைக் கையிலேந்திக் குடித்தாராக, அவரது முழங்கைவழியே ஒழுகா நின்ற சேடத்தை உமாபதிசிவனார் உட்கொண்டார்.

உமாபதி சிவனாரின் இச்செயல் தில்லைவாழ் அந்தணர்க்கு (இவரிடம்) வெறுப்பை உண்டாக்கியது. அதனால் அவர்கள் கோயிற்கிரியைகளில் இவரைச் சேர்த்தாரில்லை — இழிமொழி கூறி நீக்கிவிட்டனர், உமாபதி சிவாசாரியாரின் அதிதீவிர பக்குவ நிலையைத் தில்லைவாழ் அந்தணர் முதலியோருக்கு உணர்த்த விரும்பிய இறைவன் சிதம்பரத்தில் ஒருமுறை நடைபெற்ற கொடியேற்றத் திருவிழாவின்போது கொடி ஏறுமாறு செய்து "கொற்றங்குடிச் சிவாசாரியரைக்கொண்டு கொடியேறச் செய்க" என்றருளிச்

செய்தார். அங்ஙனமே தில்லைவாழ் அந்தணர் சென்று உரைக்க, அப்பணி தலைமேற்கொண்டு சிதம்பரத்துக்கு எழுந்தருளிய கொற்றங்குடி அடிகள் இக்கொடிக்கவி என்னும் பிரபந்தத்தைப் பாடி ஏருது நின்ற கொடியை ஏற்றி விழாவை முட்டின்றி நடத்தினர்கள் என்ப.

நூற்பெயர்க் காரணம்

இந்நூல் கொடிஏறுவதற்காகப் பாடப்பட்டது. அதனல் "கொடிக்கவி" என்னும் பெயருடையதாயிற்று. இந்நூலின் உள் இடு பொருள் - உட்கிடை ஆன்மாவின் தாழ்ந்த நிலையாகிய மல பந்த நிலையிலிருந்து மேலே உயர்த்தி என்றும் விழாமல் நிறுத்துதலாகிய முத்திநிலையைக் குறிப்பதாதலின் அவ்வுண்மையை விளக்க எழுந்த கவி "கொடிக்கவி" என்றுரைப்பினும் அமையும்.

கோயிலிலுள்ள கொடிமரம் பதியையும், அதைச்சுற்றி ஏறும் கொடிச்சீலையும் அதில் எழுதிய இடபமும் பசுவையும், அச்சீலையைப் பற்றிநிற்கும் தருப்பைக்கயிறு பாசத்தையும், கொடிச்சீலையினகத்தே இருக்கும் மஞ்சள் நூல் பசுவுக்கு (உள்) உயிராய்நின்று தெளிவிக்கும் திரோதான சத்தியையும் குறிப்பன. கொடியேற்ற விழாவில், உயிர் பாசப்பற்றை நீக்கி அருள்வழிப்பட்டு இறைவனுடைய திருவடிப்பேற்றைப் பெறுதலாகிய ஏற்றத்தை - உயர் நிலையைப் பெறும் என்னும் உண்மை விளக்கப்படுகின்றது. கொடி - ஆன்மா, ஏற்றம் - உயர்நிலை; எனவே, கொடியேற்றம் என்பது 'ஆன்மா கீழ்நிலையாகிய பெத்தநிலையிலிருந்து மேல் நிலையாகிய முத்திநிலை அடைதல் எனப் பொருள் கொள்ளக் கிடத்தலின், அங்ஙனமாதலை விளக்கவெழுந்த கவியைக் "கொடிக் கவி" என்றூர்.

கொடிக்கவி கூறுவது

கொடிக்கவி நூல் நான்குபாட்டல்களால் ஆனது. முதலாம் பாட்டல் கட்டளைக் கலித்துறை; ஏனைய மூன்றும் நேரிசை வெண்பாக்கள். முதலாம் பாட்டல் மாயாதீதனுகிய இறைவன், ஆன்மா, பாசம் என்னும் முப்பொருள்களின் இயல்புகளையும் உண்மையினையும் உரைக்கும். மூன்ரும் பாட்டல் இறைவன் மயாதீதனுனவன் என்பதனை வலியுறுத்தும். இரண்டாம் பாட்டல் அவ்விறைவன் நாமமாகிய சூக்கும பஞ்சாக்கரப் பொருளையும், நான்காம் பாட்டல் தூலசூக்கும அதிசூக்கும பஞ்சாக்கரங்களை உச்சரிக்கும்

முறை சிந்திக்கும்முறை அவற்றுலாம் பயன் என்பவற்றையும் உணர்த்தும்.

**பஞ்சாக்கரப் பாசுரநூல்**

நான்கு பாட்டல்களுள் இரண்டு பாட்டல்கள் பஞ்சாக்சரத்தைப் பற்றி உரைத்தலால் அப்பொருளின் மிகுதிபற்றி இந்நூலைப் 'பஞ்சாக்கரப் பாசுரநூல்' என்பாருமுளர்.

**கொடிக்கவி வெளியீடு**

இந்நூலுக்குப் பழையஉரை ஒன்று உளது. அவ்வுரையையும் அதிற்காட்டிய நுணுக்கங்களையும் அடியொற்றிச் சிவஞான போதம் சிவஞானசித்தியார் சிவப்பிரகாசம் முதலிய நூல்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு எனது மயக்க அறிவுக்கு எட்டிய வரையில் சற்றே விரித்து விளக்கிக் கற்று வல்லாரல்லார்க்கும் பயனுமாறு இவ்விளக்கவுரை எழுதப்பட்டது. சைவப்புலவர் சித்ததார்த பண்டிதர் தேர்வுகளுக்குத் தோற்றும் மாணவர்கள் நூல் கிடைக்கப்பெருமை காரணமாக இடர்ப்படாது முன்னேறும் பொருட்டும் ஏனைச் சைவநன்மக்கள் சைவசித்தாந்த உண்மைகளை இலகுவில் அறிந்து உய்திபெறும்பொருட்டும் இந்நூல் உரை இந்து சாதன இதழ்களில் தொடர்ந்து வெளியிடப்பெற்றது. இதனை வட மாநிலச் சைவ இளைஞர் மாமன்றத்து அன்பர்கள் நூல் வடிவில் வெளியிட்டுதவுகின்றூர்கள். சைவ சித்தாந்த நூலை வெளியிட்டுத் தம்பணியை நன்முறையில் ஆரம்பிக்கும் இம்மன்றத்தாருக்கும், இந்நூலை இந்துசாதன வெளியீட்டு மறுபிரதி (Reprint) ஆக மன முவந்து அச்சிட்டுதவிய சைவபரிபாலனசபை அச்சகத்தாருக்கும் எனது நன்றி உரியது.

இந்நூலிற் காணப்படும் பிழைகளையும் அவற்றுக்குரிய திருத்தங்களையும் சைவச் சான்றோர் அறியத்தந்து எனது பணியைச் சிறப்பிப்பார்களாக.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்".

**இ. செல்லத்துரை**

'வாணியகம்'
சிறுப்பிட்டி.
1—7—1964.

## உமாபதி சிவாச்சாரியார் அருளிச்செய்த

# கொடிக்கவி

### நூல்

### கட்டளைக்கலித்துறை

ஒளிக்கு மிருளுக்கு மொன்றே யிடமொன்று மேலிடிலொன்
றொளிக்கு மெனினு மிருளட ராதுள் ளுயிர்க்குயிராய்த்
தெளிக்கு மறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும் படிக்கொடி கட்டினனே.

**கொண்டுகூட்டு:** இருளுக்கும் ஒளிக்கும் இடம் ஒன்றே; ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும்; (இங்ஙனம் ஒன்று மேலிட ஒன்று ஒளிக்கும்) எனினும், ஒளியை இருள் அடராது; உயிர்க்கு உள் உயிராய்த் தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும் (உயிர்) திரிமலத்தே குளிக்கும்; (இங்ஙனம் இருக்கும்) உயிர் அருள் கூடும்படிக்கு (நான்) கொடிகட்டினன்.

**அருஞ்சொற்பொருள்:**

ஒளி - ஞானம், இருள் - ஆணவம், மேலிடல் - அதிகரித்தல்; அடராது - கூடிகில்லாது; தெளித்தல் - விளக்குதல்; திரிமலம் - ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலம்; குளிக்கும் - மூழ்கும், அழுந்தும்.

**பொருள்:** இருளாகிய ஆணவத்துக்கும் ஒளியாகிய ஞானத்துக்கும் இ(ருப்பி)டம் ஒன்றேயாகும்; (ஓர் இடத்தில் இருக்கும் இவைகளில் ஒன்றாகிய) ஆணவம் விஞ்சும்போது மற்றொன்றாகிய) ஞானம் மறைந்து நிற்கும், (அன்றி) ஞானம் அதிகரிக்கும்போது ஆணவமும் மறைந்து நிற்கும்; இங்ஙனம் ஒன்று அதிகரிக்க மற்றொன்று மறைந்து நிற்குமாயினும் ஆணவமானது (தன்னைச் சுட்டி அறியும்படி) ஞானத்தைக் கூடிப் பொருந்திநில்லாது; உயிருக்கு உயிராய் அதனுள் இருந்து இயக்கி (அறிவை) விளக்கஞ் செய்வதாகிய சிவஞானம் பூர்வபுண்ணிய விசேடத்தினால் சற்றே விளங்கித் தோன்றுமாயினும், உயிரானது அதனால் மும்மல

வேதனையினின்றும் நீங்காமல் அவற்றை அனுபவிக்கும்; இங்ஙனம் பெத்த நிலையில் கிடக்கும் உயிர் (பாசத்தைக் கெடுத்து மோட்சத்தைக் கொடுப்பதாகிய) தீக்கையிலுலே திருவருளைக்கூடி முத்திநிலை பெறும்பொருட்டு நான் கொடியை ஏற்றிக்கட்டினேன். (என்றவாறு)

குறிப்பு:-

1. 'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்:-

இதற்கு உதாரணம் 'தண்கடல் நீர் உப்பு' என்பது நீர் நிறைந்து நிற்பதற்கு இடம் கொடுத்து நிற்பது ஆகாயம். (ஆகாயத்தோடு இரண்டறக்கலந்து கடல் நிற்கிறது - கடலுள் ஆகாயமும் ஆகாயத்துள் கடலும் உள) கடலில் உள்ள உப்பு தனக்கும் நீருக்கும் இடமாய் நின்ற ஆகாயத்தைக் கலந்து நில்லாமல் அவ்வாகாயம் நின்ற இடத்திலேயே நீரைமாத்திரம் கலந்து நிற்கிறது. இங்கே ஆகாயத்துக்கும் உப்புக்கும் நிற்குமிடம் ஒன்றே ஆனமைபோல, (ஆகாயம்போன்ற) ஞானத்துக்கும் (உப்புப்போன்ற) ஆணவத்துக்கும் (நீர்போன்ற) உயிர்ஆனது (நிற்றற்கு) இடமாய் நின்றது. இக்கருத்தினை மேல்வருஞ் சிவஞானபோதச் செய்யுளான் உய்த்துணர்ந்துகொள்க.

"மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தாதல்
அஞ்ஞானம் உள்ளம் அணைத்தல்காண் — மெய்ஞ்ஞானம்
தானே யுளவன்றே தண்கடல்நீர் உப்புப்போல்
தானே யுளமுளவாத் தான். சூத் 7. செய் 5.

["மயக்க உணர்வானது ஒருதன்மைத்தாகிய அறிவெனப்படும் சிவத்தின் முன்னிலையில் சூரியனது ஒளிமுன் இருள்போல நிலைபெறுதலில்லாதொழியும்; ஆகலால் அம்மயக்க உணர்வு அவ்விடத்துள்ளதாதலின்றி அச்சிவம் என்று உள்ளதோ அன்றேதான் பொருந்துவதற்கு உரிமையுடைய உயிர்கள் உள்ளனவாக அவ்வுயிர்களைப் பற்றிநிற்றலானது குளிர்ச்சி பொருந்திய கடலினிடத்து உளதாகிய நீரைக்கலந்து நிற்கும் உப்புப்போலாம் என்க"]

## 2. "ஒன்று மேலிடில் ஒன்று ஒளிக்கும்"

(I) ஆன்மா சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் தன்மையது, அது ஆணவத்தைச் சார்ந்து நிற்கும் போது உடம்பு முதலிய மாயையையும் கன்மத்தையும் கூடி அவற்றின் மயமாய் நின்று அவற்றை அனுபவிக்கும்; அங்ஙனம் அனுபவிக்குங்கால் தனது மலபந்த நிலையையேனும் தன்னையேனும் இறைவனையேனும் அறியாது. ஆதலால் ஆணவம் மேலிட்ட காலத்து (இறைவனை உணர்த்வல்ல) சிவஞானம் ஒளித்து நிற்குமென்றார்.

(II) ஆன்மா விடிவாம் அளவும் விளக்குப்போலத் துணைசெய்யும் மாயையின் உதவியினால் கன்மபலன்களை அனுபவித்து வரும்போது இருவினைகளிலும் ஒப்ப உவர்ப்பு நிகழவே (அவ்வான்மாவுக்கு) மலபரிபாகம் உளதாகும். அந்நிலையில் திருவருளே குருவாக (ஞானாசாரியனாக) வந்து பாசம், பசு, பதி இயல்புகளை ஆன்மாவுக்கு உணர்த்தி (அதனிடத்துத் தீவிரதரமாய்ப் பதிந்து) நிற்க, அவ்வான்மா அதனால் பாசபந்தம் அறுத்து நிற்கும் - ஆகலால் ஞானம் மேலிட்ட காலத்து ஆணவம் ஒளிக்கும் என்றார்,

உ—ம்:

I 'மாயை மாமாயை மாயாவரும் இருவினையின் வாய்மை ஆயவாருயிரின் மேவும் மருளினால் இருளாய் நிற்கும்"

II "மாயை மாமாயை மாயாவரும் இருவினையின் வாய்மை ஆயவாருயிரின் மேவும் அருளினால் ஒளியாய் நிற்கும்"
—சிவ. செய், 70.

[அசுத்தமாயையும் சுத்தமாயையும் ஒழியாமல் வருகின்ற புண்ணிய பாவங்களுமாகிய இவைகளின் உண்மையாய் நின்று போகங்களை அனுபவிக்கும் அரிய உயிரினிடத்துப் பொருந்திய மயக்க நிலையிலே அந்த ஞானமானது வெளிப்படாமல் மறைந்து நிற்கும்; அசுத்தமாயையும் சுத்தமாயையும் ஒழியாமல் வரும் புண்ணிய பாவங்களுமாகிய இவற்றின் உண்மையை அறிந்து அவற்று நின்று நீங்கும் அரிய உயிரினிடத்

திலே பொருந்திய அருள்நிலையிலே அந்த ஞானமானது வெளிப்பட்டுப் பிரகாசமாய் நிற்கும்"]

மேலும் இறைவனும் அவன் அருளும் பெத்த நிலையில் இருக்கும் (பேரன்பில்லாத) அபக்குவான்மாக்களுக்குப் பாலில் நெய்போல விளங்காது நிற்கும் என்பதும், (பேரன்புடைய) பக்குவான்மாக்களுக்குத் தயிரில் நெய்போல விளங்கித் தோன்றும் என்பதும் ஈண்டு உணரத் தக்கது.

உ—ம்:

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னுள் இருத்தலால் — தன்னுணரும்
நேசத்தர் தம்பால் நிகழும் ததிநெய்போல்
பாசத்தர்க் கின்றாம் பதி.

–சிவ. ஞா. போ. சூத்: 12 செய்: 3.

[இறைவனவன் உலகத்துள்ளார் தன்னை உணரும்பொருட்டு திருநீறு கண்டிகை முதலிய திருவேடமாகிய தனது திருவடிவத்தைத் தனது அன்பர்க்குக் கொடுத்தலாலும் அவ்வன்பர் தன்னைச் சிவோகம் பாவனையால் அறியச்செய்தலாலும் அவ்வாறு ஒரு குறியினிடத்து நின்று உணருகின்ற அவர்களைத் தனது வியாபகத்துக்குள்ளாக இருத்தலாலும் குறியும் ஒழிந்து நின்று தன்னை உள்ளவாறு உணருகின்றவர்களிடத்துத் தயிரிலே வியாபித்த நெய்போல விளங்கித் தோன்றுவன்; அவ்வியல்பு அற்ற பாசபந்தமுடையாரிடத்து பாலிலே வியாபித்த நெய்போல விளங்கா நிற்பன்."]

3 இருள் (ஒளியை) அடராது:-

இறைவன் எவ்விடத்தும் எப்பொருளிலும் நீக்கமற வியாபித்துள்ளவன் - அவனை அகன்று எங்கும் எவையும் இன்று. எனவே ஆணவம் முதலிய பாசங்களிலும் அவன் வியாபித்துள்ளான். அங்ஙனம் வியாபித்துள்ள அவன் அவற்றை அவற்றுக்குப் புறம்பே நின்று சுட்டி அறியவேண்டியதில்லை. மேலும் இறைவன் முற்

றுணர்வினன் ஆதலின் அம்முற்றுணர்வாகிய பேரறிவினுள் அறியாமையாகிய ஆணவம் பொருந்திக் கூடி நில்லாது - ஒளியை இருள் அடராது என்க.

x x x

பூமியிலே பொருந்திய இருளைச் சூரிய ஒளி கூடிக் கலக்கிறது. அங்ஙனம் கலக்கும்போது அவ்விருளை ஒளி காண்பதில்லை - ஒளிக்கு இருள் என்பது இல்லாத பண்டம். ஆயினும், இருள் ஒளி நின்ற இடத்தை அகன்று வேறு ஓர் இடத்துக்குப் போகவும் இல்லை; அது அங்கேயே உள்ளது - ஒளியைக் கூடி மயக்கி அகற்றமாட்டாமல் அங்கு வலிகுன்றிக் கிடந்த இருள் பூமியை மயக்கி நிற்கும்.

சூரியனது ஒளி இருளைக் கலந்து நிற்பதுபோல சிவஞானம் ஆணவத்தைக் கலந்து நிற்கும் என்பதும், அங்ஙனம் கலந்து நின்றும் ஒளி இருளைச் சுட்டிக் காணாததுபோலச் சிவஞானமும் ஆணவத்தைச் சுட்டி * அறியாது என்பதும், ஒளி இருளைக் கலந்து நின்ற போதும் இருளினால் ஒளி பற்றப்பட்டு மயக்கப்படாமை போல சிவஞானமும் ஆணவத்தைக் கலந்து நின்ற போதும் ஆணவத்தினால் அச்சிவஞானம் பற்றப்பட்டு மயக்கப்படாமையும் ஈண்டுப் பொருத்தி உணரத் தக்கன.

உ - ம்:

"அன்னிய மின்மை அரற்கொன்றுணர் வின்றும்
அன்னியமி லானசத்தைக் காண்குவனேல் — அன்னியமாக்
காணா னவன்முன் கதிர்முன் னிருள் போல்
மாணா அசத்தின்மை மற்று".

—சிவ. ஞா. போ. சூ. 7. செய்: 1.

---

* சிவஞானம் ஆணவத்தை அறியாது என்றமையால் இறைவனின் முற்றுணர்விற்குப் பங்கம் உண்டாமேயெனின், அறியாமையாகிய ஆணவத்தை அறிவதாலேயே அறிவுக்குப் பூரணத்துவம் குறையுமாதலாலும், அவ்வாணவத்தை அறிவதால் ஆவதொரு நன்மைப்பாடும் இல்லையாதலாலும் அது இழுக்காகாமை யுணர்க.

அன்றளவி உள்ளொளியோ டாவி யிடையடங்கி
இன்றளவும் நின்ற திருள்.

—திரு. அரு ப — அதி: 3. செய்: 3.

[I ‘சூரிய ஒளி முன் இருள்போல இறைவன் முன்னிலையில் சன்மையில்லாத பிரபஞ்சம் விளங்க நில்லாது. எனவே தன்னுள வியாப்பியமான பசு பாசங்களோடு வேற்றுமையின்றி உடனாய் நிற்றலையுடைய முதல்வனுக்குச் சுட்டியறியக்கிடப்பதொன்று இல்லையாதலால், அத்தன்மையனாகிய இறைவன் அசத்தை அறியலுறுவானாயின் (அறிந்தாங்கு அறிவனன்றி) நம்மனோர் போல வேறாகச் சுட்டி அறிவானல்லன்’’]

[II “ஆணவமானது உயிர்க்கு உயிராய் நின்று அறிவை விளக்கும் (திருவருளையுடைய) சிவத்தைச் சாராமல், அவ்வுயிர் என்று உளதோ அன்றே (அநாதியே) அதனைமாத்திரம் பொருந்தி இன்றுவரையும் நிற்கின்றது.

4. “உயிர்க்கு உள் உயிராய்த் தெளிக்கும் அறிவு திகழ்ந்து உளது; (அங்ஙனம் திகழ்ந்து உளதேனும் உயிர்) திரிமலத்தே குளிக்கும்”:-

இறைவனது ஞானமாகிய சத்தி அவனைப்போல யாண்டும் வியாபித்துள்ளது. ஆகவே, அது உயிருக்கு உள்ளே நின்று அவ்வுயிரை இயக்குதற்கும உதவுகின்றது. அது, ஆன்மா பாசத்தால் பிணிக்கப்பட்ட நிலையில் தன் தகுதியில் சற்றே குறைந்ததாய், திரோதான சத்தி என்னும் பெயரதாய் ஆன்மாவினிடத்தே இச்சை, ஞானம், கிரியை என்னும சக்திகளாய் விரிந்து, ஆன்மாவுக்கு அறியாமையைத்தரும் ஆணவத்துக்கு வலிமையை மிகுவித்து, நன்கு மறைத்தலைச் செய்து அசுத்தமாயை சுத்தமாயைகளில் தனுகரண புவன போகங்களைத் தோற்றுவித்து, அவைகளோடு ஆன்மாவைச் சேர்த்து, இருவினைப்பயன்களை அனுபவிப்பித்தப்பின் இருவினைகளிலும் ஒப்பு உவர்ப்பு (இருவினை ஒப்பு) நிகழ்வித்து அதனால மலபரிபாகத்தை வருவித்து சரியை, கிரியை, யோகம என்னும் சிவபுண்ணியங்களை

இயற்றுவித்து அவற்றால் மந்ததரம் மந்தம் தீவிரம் ஆகிய சத்திநிபாதங்களைப் பொருந்துவித்து 'விடிவாம் அளவும் விளக்குப்போல' (திருவருட்சத்தி குருவடிவாய் வந்து தீவிரதர சத்திநிபாதத்தை ஆக்கிச் சிவஞானத் தால் முத்தியின்பம் தருமவரை) சற்றே உயிருக்கு விளக்கஞ் செய்து நிற்கும். இங்ஙனம நிற்றலையே "உயிர்க்கு உள்ளுயிராய்த் தெளிக்கும அறிவு திகழ்ந் துளது" என்றார்.

இங்ஙனம் ஞானம் வரும்வரை திரோதான சத்தி சிறிது உபகாரம் செய்து நிற்குமாயினும் அதனால் பர முத்திக்கு ஏதுவாகிய தீவிரதர சத்திநிபாதம ஆன்மா வுக்குக் கைகூடாது; அதற்குத் திருவருட்சத்தியே குரு வடிவாய் வந்து சிவஞானந்தந்து துணைபுரிய வேண்டும.

திருவருட்சத்தி குருவடிவாய் வந்து தீக்கை செய்யாது ஒழியுமிடத்துப் பரிபூரணமாய் ஆணவ மயக்கந்திரா திருக்குமாதலின் அம்மயக்கங்காரணமாக உயிர் மேலுந் தாழ்நிலையடைந்து மும்மலங்களிலும் அழுந்தும் என் பார், "தெளிக்கும் அறிவு திகழ்ந்துளதேனும் திரி மலத்தே (உயிர்) குளிக்கும்" என்றார். இவ்வுண்மை யைத் திருவுந்தியார் மேல்வருமாறு தெளிவுபடுத்து கிறது.

"கிடந்த கிளவியைக் கிள்ளி எழுப்பி
உடந்தை யுடனே நின்றுந் தீபற
உன்னையே கண்ட தென்றுந் தீபற".

செய்: 14.

[அநாதியாக உன்னிடத்தில் உனக்கு உயிராய்ப் பொருந்தியிருக்கும் திரோதான சத்தியை இறைவன் ஞானசாரியனாக வந்து அதிட்டித்து நின்று எழுப்புவ தனால் உளதாகும் அத்திருவருட் சத்தியோடு நீ கூடி நின்று உனது தீமையினின்றும் நீ நீங்குவாயாக. மேலும அத்திருவருட்சத்தி, நீ பக்குவமடைந்த காலத் தும் தானே வலியவந்து உன்னைக்கண்டது என்றும் உனது திமையினின்றும் நீங்கி உய்திபெறுவாயாக.]

5: ஞானதேசிகனது தீக்கையின்றிச் சிவஞானமும் பயனும் உண்டாகா:-

மந்திரம் மருந்து யோகம் இரதகுளிகை என்பவற்றால் வருகின்ற சித்தி ஞானங்களும், வேத ஆகம ஞானங்களும் முக்காலமும் உணர்ந்து உரைக்கவல்ல ஞானமும் அணிமா முதலிய ஞானங்களும் ஆகிய அபர ஞானம், ஆசிரியனை இன்றியும் சித்திக்கக்கூடியது; ஆனல், இறைவனது அடிசேர் ஞானம் (-சிவஞானம் - பரஞானம்) அவ்விறைவனே குருவாய் வந்து தீக்கைக் கிரமங்களினலே அளித்தால் அன்றி வேறு எவ்வாற்ருனும் உளதாகாது என முடிந்த முடிபாகச் சிவஞான சித்தியாரிற் கூறப்பட்டிருக்கின்றது. அது வருமாறு;

"மந்திரத்தான் மருந்துகளால் வாய்த்த வியோகத்தான்
மணியிரத குளிகையினுன் மற்றும் மற்றுந்
தந்திரத்தே சொன்னமுறை செய்ய வேத
சகலகலை ஞானங்கள் திரிகால ஞானம்
அந்தமிலா அணிமாதி ஞானங்கள் எல்லாம்
அடைந்திடும் ஆசான் அருளால் அடிசேர்ஞானம்
வந்திடுமற் றென்ருலும் வாராதாகும்
மற்றவையும் அவனருளால் மருவும் அன்றே."

—சித்தி: சூத்: 12; செய்: 6.

இஃதன்றி, சமய தீக்கையினல் மந்திர உச்சரிப்புக்கு அதிகாரமும் விசேட தீக்கையினல் மந்திரம் பூசை யோகம் என்பவற்றுக்கு அதிகாரமும் பெறறுக் கொள்ளலாம் என்பதும், அடிசேர் ஞானத்தைத் தருவதாகிய நிருவாண தீக்கையினலேயே ஆறு அத்துவாக்களும் நீங்கப்பெற்று ஆன்மா சிவகதி அடைய முடியுமென்பதும் மேல்வரும் சிவப்பிரகாசச் செய்யுளானுமுணரற்பாலன.

"விரும்பியமந் திராதிகார மர்ச்சனு திகார
மேவும்யோ காதிகார மெனச் சமய விசேடம்
வரும்;பொருவி னிருவாண(ம்): மந்திரங்கள் பதங்கள்
வன்னங்கள் புவனங்க டத்துவங்கள் கலைகள்

இரங்கலைட்விற் றேகைபதினேன் றெண்பத்தோன் றைம்பத்
திரு நூறரே டிருபத்து நாலாறு றைந்தற் [தோன்
பரந்த நெறியறு வகையு மொருவி, நினைவரிதாம்
பரபதத்து ளுயிர்விரவப் பயிற்று மன்றே".

சிவப்: 9.

6. தீக்கை:-

பாசத்தைக்கெடுத்து முத்தியைக் கொடுத்தல் தீக்கை எனப்படும். (தீ - கொடுத்தல். க்ஷா - கெடுத்தல்) அத் தீக்கை ஏழுவகையினது. அவை நயனதீக்கை, பரிச தீக்கை, மானசதீக்கை, வாசகதீக்கை, சாத்திர தீக்கை, யோகதீக்கை, அவுத்திரிதீக்கை என்பன.

நயன தீக்கை:- மீன் தனது சினைகளைப் பார்த்தலால் குஞ்சுகளை உண்டாக்குதல் போல், குரு சீடனைத் தலை தொடக்கம் கால்வரை அருட்பார்வை செய்து அவனது ஆணவத்தைக் கெடுத்தல் நயனதீக்கை எனப்படும், இது சட்சுதீக்கை எனவும் படும்.

பரிசதீக்கை:-

பறவை தன் சிறகினுல் முட்டையைப் பரிசிப்பதால் குஞ்சுகளை உண்டாக்குதல்போல், குரு சீடனைத் தமது கரசரணங்களால் பரிசித்து அவனுடைய மாயாமலத் தைக் கெடுத்தல் பரிசதீக்கை எனப்படும்.

மானச தீக்கை:-

ஆமை கரையிடத்திருந்து தனது முட்டைகளை மனதிலே நினைத்தல் மாத்திரையானே குட்டிகளை அம்முட்டையினின்றும் தோற்றுவித்தல்போல, குரு தமது சீடனைத் தமது அருளுருவாய்ப் பாவித்தலினுல் அவனது ஆன்மபோதத்தை நீக்கிச் சிவபோதத்தை உண்டாக்குதல் மானச தீக்கையாம்.

வாசக தீக்கை:-

குரு திருவைந்தெழுத்தையும் பருனெரு மந்திரங் களையும் அந்தந்த எழுத்துக்களுக்குரிய கால அளவுக ளோடு உச்சரித்துச் சீடனுக்கு ஞானத்தை உபதேசித் தல் வாசக தீக்கை எனப்படும்.

சாத்திர தீக்கை:-

குரு வேத சிவாகமங்களிற் சொல்லப்பட்ட பதி பசு பாச இலக்கணங்களையும், பசுவானது பாசத்தை நீக்கி முத்தியடையும முறையையும் சுருங்கககூறி விளக்குதல் சாத்திர தீக்கையாம்.

யோக தீக்கை:-

குரு சீடனது இதயத்திற் பிரவேசித்து சிவயோகத்தை அப்பியாசம் பண்ணும்படி உபாசித்து அச் சீடனைத் தம்மோடு (சிவத்தோடு) சேர்த்தல் யோக தீக்கையாம.

அவுத்திரி தீக்கை:-

குண்ட மண்டலமிட்டு, அக்கினி காரியமுஞ் செய்து பாசத்தை நீக்குவது அவுத்திரி தீக்கையெனப்படும். (குண்டம் - ஓமாக்கினி வளர்ப்பதற்கு நிலத்திலே கிண்டப்பட்ட கிடங்கு, மண்டலம் - வட்டம் சுற்றுதல், அவுத்திரி - ஓமத்தோடு கூடிச் செய்வது; ஹோத்திரம் - ஓமம்) இத்தீக்கைக்கு நயனதீக்கை முதல் யோகதீக்கை வரையுள்ள ஆறும் அங்கங்களாம். இந்த அவுத்திரி தீக்கை ஞானவதி, கிரியாவதி என இருவகைப்படும்.

கிரியாவதி:-

குண்ட மண்டலங்களைப் புறத்தேயிட்டு விதிப்படி புறத்தே ஆகுதி முதலிய கிரியைகளைச் செய்வது.
(கிரியாவதி - கிரியையை உடையது)

ஞானவதி:-

குண்ட மண்டலங்களை மனத்தாற் கற்பித்துக் கொண்டு ஆகுதி முதலிய கிரியைகளை அகத்தே செய்வதாகும். (ஞானவதி - ஞானத்தை உடையது; வதி - உடையது.

x x x

சமய தீக்கை:-

சகலருள் மந்ததர பக்குவமுடையவர்களுக்கு அநுகூலமாக மந்த சத்திநிபாதத்தை அநுசரித்துச் செய்யப்படுவது சமய தீக்கை எனப்படும். இத்தீக்கை பெற்

றோர் மந்திரங்களுக்கு யோக்கியராகிச் சரியாவான்களாவர். விசேடதீக்கை: சகலருள் மந்த பக்குவமுடையவர்களுக்கு அநுகூலமாக மந்த சத்திநிபாதத்தை அனுசரித்துச் செய்யப்படுவது விசேடதீக்கையாம். இதனைப் பெற்றவர்கள் மந்திரம் சிவபூசை இரண்டிற்கும் யோக்கியரான கிரியாவான்களும் (யோகத்திற்கு யோக்கியரான) யோகவான்களுமாவர்.

நிருவாண தீக்கை:-

இது சீடனது பாசபந்தம் அத்தனையும் நீக்கி இறைவனது திருவடியை அடையச் செய்யும் தீக்கையாம். இத்தீக்கை இருவகைப்படும். அவை: சத்தியோ நிருவாண தீக்கை, அசத்தியோ நிருவாண தீக்கை என்பன.

தீக்கை செய்த அப்பொழுதே முத்தியடையச் செய்வது சத்தியோ நிருவாண தீக்கை எனப்படும். சந்தனாசாரியருள் ஒருவரான இந்நூலாசிரியர் (உமாபதிசிவாசாரியர்) பெற்றான்சாம்பானுக்கும், முள்ளிச்செடிக்கும் முத்திகொடுத்தமை இதற்குச் சான்றாகும்.

பிராரத்ததேகம் ஒழிந்த பின்னர் முத்தியை அளிக்கும். நிருவாண தீக்கை அசத்தியோ நிருவாண தீக்கையாகும். இதற்குச் சான்றானவர் சமயாசாரியருள் ஒருவராய மாணிக்கவாசக சுவாமிகளாவர்.

7. கொடிகட்டினேன்:-

கோயிலிலுள்ள கொடிமரம் பதியையும், அதைச் சுற்றி ஏறும் கொடிச்சீலையும், அதில் எழுதிய இடபமும் பசுவையும், அச்சீலையைப் பற்றி நிற்கும தருப்பைக் கயிறு பாசத்தையும், கொடிச்சீலையினகத்தே இருக்கும மஞ்சள் நூல் பசுவுக்கு (உள்) உயிராய் நின்று தெளிவிப்பதாகிய திரோதான சத்தியையும் குறிப்பன.

'உயிர் பாசப்பற்றை நீக்கி, அருள்வழிப்பட்டு நின்று, இறைவனுடைய திருவடிப்பேற்றைப் பெறுதலாகிய ஏற்றத்தை அடையும்; உயர் நிலையைப் பெறும்' என்னும் உண்மையைக் கொடியேற்ற விழா குறிப்பிடுகின்றது. கொடி - ஆன்மா, ஏற்றம் - உயர்நிலை; எனவே 'கொடி ஏற்றம்' என்பதற்கு ஆன்மா பெத்த நிலையா

கிய கீழ்நிலை ஒழிந்து, முத்தி நிலையாகிய மேல் நிலை அடைதல் எனப் பொருள்கொள்ளலாம்.

கொடி வேறொரு பற்றுக்கோட்டினாலும் மேல் உயர்ந்து ஏருமல், கொடிமரமே பற்றுக்கோடாக ஏறி நிற்றலானது, சிவனே குருவாய் வந்து அருளினல்லது வேறெவ்வாற்றானும் ஆன்மா அவனை அடைய முடியாது என்பதைக் குறிப்பதாகும்.

இங்ஙனம் உட்பொருளை விளக்கி, ஆன்மாவை ஈடேற்றும் வண்ணம் இக்கொடியேற்று விழாவை நடாத்துகின்றேன் என்னும் பொருள் அமையுமாறு "கொடிகட்டினேன்" — கொடியை ஏற்றி (உயர்த்திக்) கட்டினேன் என்றாரென்க.

### நேரிசை வெண்பா

பொருளாம் பொருளேது போதேது கண்ணே
திருளாம் வெளியே திரவே — தருளாளா
நீபுரவா வையமெலா நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற் கோடி. 2.

கொண்டுகூட்டு: அருளாளா, "பொருள்(களிலே) ஆம் பொருள் ஏது?" (எனவும்), "போது ஏது?" (எனவும), "கண் ஏது?" (எனவும்), "இருள் ஆம் வெளி ஏது?" (எனவும்), "இரவு ஏது?" (எனவும் வினவுவார்க்கு அவற்றது உண்மைகூறி நிறுவுதற் பொருட்டும்) நீ புரவா வையம் எ(ல்)லாம் (அவ்வுண்மையை) அறிய (வைத்தற்பொருட்டும்), நீ அறிய, (நான்) கோபுர வாச(லி)ல் கொடிகட்டினேன்.

அருஞ்சொற் பொருள்: பொருள் ஆம் பொருள் - சிவம். (அது, பொருள்களுக்குள்ளே சிறந்ததும் அழிவற்றதுமான பொருள்) போது-சத்தி (போது-சூரியன்; சூரியன் அதன் குணமாகிய கிரணத்துக்கு ஆகுபெயராய் நின்று, உவமைமுகத்தால் சத்தியை விளக்கிற்று.) கண் - ஆன்மா (கண் தன் ஒத்த இயல்புகளால் உவமையாய் ஆன்மாவைக் குறித்தது.

பொருள்: உயிர்களிடத்துப் பெருங்கருணையுடைய இறைவனே, பொருள்களுக்குள்ளே அழிவின்றி

என்றும் நிலைபேறுடைய சிறந்த பொருளாகிய "சிவம் யாது?" எனவும், கிரணம்போல்வதாகிய "சத்தி யாது?" எனவும்; (சூரிய கிரணம் ஆதாரமாகத் தன் பார்க்குஞ் சத்தி கொண்டு சூரியனை அறியும்) கண்ணைப்போன்ற "ஆன்மா யாது?" எனவும், அஞ்ஞானந்தரும் "சகலம் யாது" எனவும், அவ்வஞ்ஞானம மிக்குடைய "கேவலம் யாது?" எனவும் வினவுவார்க்கு, அவற்றது உண்மை கூறி நிறுவுதற்பொருட்டும், தேவரீர் பொருந்தி ஆண்டருளும் உலகத்தாரனைவருக்கும் அவ்வுண்மையை அறியவைத்தற்பொருட்டும், தேவரீரே சாட்சியாகத் (தேவரீர் கலந்து புரந்து நின்ற வையமுஞ் சாட்சியாக நான் சத்தியஞ் செய்து) திருககோபுர வாசலிலே கொடியை (உயர்த்தி)க் கட்டினேன்.

பொருளாம் பொருளேது என்றற்றொடக்கத்து வினக்களெல்லாம் மறுப்புப்பொருள் எனக்கொண்டு, "சிறந்த பொருளென்று கூறப்படும் சிவம் (ஏது?) இல்லை; கிரணம்போன்றது என்று கூறப்படும் சததி (ஏது?) இல்லை; கண்போன்றது எனப்பட்ட ஆன்மா (ஏது?) இல்லை; அஞ்சானநதருமியல்பினதென்ற சகலம் (ஏது?) இல்லை; அவ்வஞ்ஞானம் மிககதெனபபட்ட கேவலம் (ஏது?) இல்லை; என்று கூறும் உலக யதருக்கு அவை யாவும உள் பொருள்களே என்று நிறுவுதற பொருட்டும்" எனப் பொருளுரைப்பினும் அமையும். உலகாயதருக்குப் பிரத்தியட்சப் பிரமாணமாகக்கணும் உலகத்தையே சாட்சியாக வைத்து சிவம முதலியவற்றி னுண்மை நிரூபிககப்பட வேண்டுமாதலின் அதற்கியைய, 'நீ புரவா வையம் எலாம் அறிய' என்பதை இரட்டுற மொழிந்து, அத்தொடருக்கு "தேவரீர் கலந்து நின்று ஆண்டருளும் உலகம் சாட்சியாக (அவை யாவும உள் பொருள்களே என்று நிறுவுதற்கும்) எனவும் பொருள்கொள்க.

குறிப்பு:—

1. பொருளாம் பொருள்:-

பொருள்களுக்குள்ளே சிறந்ததும் அழியாதது மான பொருளைச் செம்பொருள் எனவும் மெய்ப் பொருள் எனவும் கூறுப.

"அப்பொருள் பசு பாசங்கள் எல்லாவற்றுக்கும் மேலான பொருள்" எனவும்; "அது அருவமும் உருவமும் அல்லாததாய், குணம் குறிகள் இல்லாததாய், மலபந்தமற்றதாய், ஒரே பொருளாய், அழிவற்றதாய, அளவற்ற உயிர்களுடைய அறிவுக்கு அறிவாய் விருப்பு வெறுப்பு என்னும் மாறுபட்ட தன்மைகளைப் பொருந்தாததாய், கண்டிக்கப்படாததாய், ஆனந்தமே உருவமாய், பாசஞான பசுஞானங்களால் அறிந்து சொல்லுவதற்கு அரியதாய், பதிஞானம் ஒன்றினுலே மாத்திரம் சென்று அடையத்தக்க முத்தி நிலையாய், பெரிய பொருளினும் பெரியதாய், சிறிய பொருளினும் சிறியதாய் விளங்குவது" எனவும்; "(அது) சிவம் எனப்படும்" எனவும் சிவப்பிரகாசம் உரைக்கும்:-

பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப்
 பதிபசுபா சந்தெரித்தல் பதிபரமே யதுதான்
நிலவுமரு வுருவன்றிக் குணங்குறிக ளின்றி
 நின்மலமா யேகமாய் நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி யசல மாகி
 யகண்டிதமா யானந்த வுருவா யன்றிச்
செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
 திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்துளோரே.

—சிவப்.

இச்சிவம் ஆன்மாக்களுக்கு உள்ளும் புறமும் பற்றுக்கோடாக நின்று என்றும் நிலைத்த பேரின்பத்தை உதவுவதால் தனக்கு ஒப்பும் உயர்வும் அற்றது; எனினும் ஈண்டு அதற்கு ஒருபுடை ஒப்பாகச் சூரியனைப் பொருத்தி உணர்தலேற்புடைத்து.

2. (போது போன்றதாகிய) சத்தி:—
போது — சூரியன்

சூரியன் கிரணத்தை உடையபொருள். சூரியன் இன்றிக் கிரணமும், கிரணம் இன்றிச் சூரியனும் இல்லை. இங்ஙனம் ஒன்றை ஒன்று இன்றி அமையாதாயினும், கிரணத்துக்கு முதலாய் நின்றபொருள் சூரியனே. அச் சூரியனின் கிரணம் உலகவிருள் கடிந்து, (சுயஒளியுடைய) கண்ணுக்குப் பொருள்களையும் தன்னையும், தன் முதலையும் துலக்கி அனுபவிப்பிக்கும். இதுபோல, இறைவனை இன்றித்

தானே தனித்து நில்லாத — இறைவனுந் தானும் வேறறக் 'குணி குண' சம்பந்தமாய் நின்ற ஞானப் பிரகாசமாகிய சத்தி ஆன்மாவை அநாதியே பந்தித்த மும்மலவிருளை (அநுபவிப்பித்து) நீக்கி, (ச் சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறியுந் தன்மையுடைய) அவ்வான்மாவுக்குத் தன்னையும் தான் அடைவிக்கத் தக்க தன் முதலாகிய சிவத்தையும் காட்டி, அச்சிவத்தோடொன்றுவித்துப் பேரின்பமாகிய பயனை நல்கும்.

உ+ம்:—

i சுத்தமாஞ் சத்தி ஞானச் சுடராகும்; சிவமோ ழிந்தச்
சத்திதா னின்றும்; முன்னைத் தகவிலா மலங்கள் வாட்டி
அத்தனை யருளும்; எங்கு மடைந்திடு மிருள கற்றி
வைத்திடும்; இரவி காட்டும் வளரொளி போன்ம கிழ்ந்தே.

சிவப். செய். 75.

[("மல பந்த மற்றதாகிய சிவ சத்தி ஞானப் பிரகாச மாய் நிற்கும்; அச் சத்தி ("நிறை ஒளி முதலதின்றி நின்றிடா"மை போல) சிவத்தை அகன்று தானே தனித்து ஒரு முதலாக நிற்கமாட்டாது. எங்கும் செறிந்து கிடக்கும் இருளை நீக்கி உதவுகின்ற (தன்முதலாகிய) சூரியனைக்காட்டு கின்ற மிக்க ஒளியைப்போலச் சத்தியும் ஆன்மாவை அநாதியே பந்தித்து நின்ற இழிந்த இயல்பினையுடைய மும்மலவிருளைப் போக்கித் தனக்கு முதலாகிய சிவனை இன்ப முறத் தரிசிப்பிக்கும்".]

ii "சத்திதன் வடிவே தென்னில் தடையிலா ஞான
மாகும் ... ... ......" —சித்தி. 1ம் சூத். 62ம் செய்.

[("சிவசத்தியின் சொரூபம் யாதெனில், அது (உயிர்க ளுக்கு அநுக்கிரகம் மாத்திரம் குறித்துப், பொதுவகை யால்) அறிந்தும் அறிவித்தும் நிற்பதாகிய ஞானம் ஒன்றே யாம்; அதுவே பராசத்தி எனவும்படும்".]

iii. "......வரும்வடி வெல்லாம் சத்தி சத்திதான்
மரமுங் காழ்ப்பும், இருமையும் போல மன்னிச்
சிவத்தினோ டியைந்து நிற்கும்".

—சித்தி. 1ம் சூத். 67ம் செய்.

[("ஐந்தொழில்களுக்குத் தக இறைவன் கொள்ளு கின்ற) வடிவ வேறுபாடெல்லாம் இறைவனும், சத்தியும், மரமும் அதன் வயிரமுமாகிய இரண்டும் 'குணிகுண' சம் பந்தமாய் நின்றமைபோல நிலைபெறுதலால், சத்தி சிவசம் பந்தமுடையதாய் நிற்கும்"]

iv "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலா னெங்கள் பிரான்"

—திருவருட்பயன் பதிமூது. 2ம் செய்.

["எமது தலைவனுகிய இறைவன் மனம் வாக்குகளுக்கு எட்டாததும், மலபந்தமற்றதும், பேரானந்தமானதுமான தனது ஒப்பற்ற நிலைமையை ஆன்மாக்கள் அறிந்து அநுபவித்தற்குத் துணைசெய்கின்ற திருவருட்சத்தியோடு பேதமறக் கலந்து நிற்பன்".]

3. (கண் போன்ற) ஆன்மா

கண் சுய ஒளி உடையதாய்க் காட்டக் காண்பது; படிகம் ஆகாயம் என்பவைபோலச் சார்ந்ததன் வண்ணமாய் - அதுவதுவாய் வசிப்பைப்பற்றிய வியாபகமுடையதாய் நிற்பது. இக்கண் போன்றதாகிய ஆன்மா அக்கினியைப்போல மற்றொன்றைப் பற்றி நிற்பதல்லது தனித்து நிற்கிற முதலன்று; அது சதசத்தாய் பூவிற் கந்தம் போல உளதாய பொருளாம்.

(அ) பார்க்கும் சத்தி இழந்த குருடனுடைய கண்கள் சூரியனது ஒளியையும் அவ்வொளிகாட்டும் அதன் முதலாகிய சூரியனையும் அறியா. குருடனுக்குக் கண்ணும் சூரிய ஒளியும் இருந்தும் அவற்றால் அவன் எதையும் அறியாமைக்குக் காரணம் அவனது கண்களுக்கு (அறிவிக்க அறியும் இயல்பினையுடைய) சுய ஒளி இல்லாமையேயாம். அதுபோல, ஆன்மாவுக்கும் அறிவிக்க அறியும் சுய அறிவு இல்லையேல் அது ஒன்றினையும் அறியாது. ஆனல், ஆன்மாவோ விடயங்களை அறிந்து நிற்றல் கண்கூடாகக் காணப்படுதலின் அவ்வான்மாவுக்கும் (கண்ணுக்குச் சுய ஒளி உள்ளமை போல) சுய அறிவு உள்ளதாம். மேலும், கண் சூரிய ஒளி இன்றித் தானே ஒருபொருளைக் காணமாட்டாமை போல ஆன்மாவும் திருவருட்சத்தியின் துணையின்றித் தன் அறியுஞ் சத்தி மாத்திரையானே ஒரு பொருளையும் அறியமாட்டாது.

உ + ம்:—

* ஒளியும் இருளும் உலகும் அலர்கண்
தெளிவில் எனிலென் செய

திருவருட். 2ம். அதி 6ம் செய்.

[கண்ணுக்குச் சுய ஒளி இல்லையெனில் சூரிய ஒளியால் விளக்கமும் இருளினல் மறைப்பும் உலகக்காட்சி

அனுபவங்களும் இல்லை. அதுபோல, உயிருக்கு அறிவு இல்லையானல் (திருவருட் சத்தியாகிய) சிவஞானத்தால் அறிவு விளக்கமும் ஆணவத்தால் மறைப்பும் சிவானு பவமும் இல்லையாம்.]

* ஊன் அறியா தென்றும் உயிர் அறியா தோன்றும் இது
தான் அறியா தாரறிவார் தான்.

—திருவருட். 4ம் அதி. 3ம் செய்

[உடம்பு அறிவற்ற பொருளாதலால் ஒரு காலத்தும் ஒரு பொருளையும் அறியாது; உயிர் தானே ஒன்றையும் அறியாது; ஆதலால், திருவருள் அறிவிக்க அறிவதன்றி வேறு எவ்வகையானும் ஆன்மா எதனையும் அறியமாட்டாது.]

(ஆ) படிகம் தன்னை எவ்வகைப் பொருள் சாருகின்றதோ அவ்வகைப் பொருளாய்க் காட்டித் தானும் அத் தன்மையதாய் நிற்கும். ஆகாயமும் அத்தன்மைய தாம். இங்ஙனமே கண்ணும், ஒளியோடும் இருளோடும் சார்ந்து தானும அதுவதுவாய் வசிப்பைப்பற்றிய வியாபகமுடையதாய் நிற்கும். இவ்வாறு படிகம் ஆகாயம் என்பவற்றின் இயல்பைப் பொருந்திய கண்ணை ஒத்த ஆன்மா தன்னை ஆணவமாகிய பேரிருள் சார்ந்தவிடத்து அத்தன்மையதாய்ப் பெத்தத் தழுந்துவதாயும், சிவஞானமாகிய பேரொளி சார்ந்தவிடத்து முத்தி நிலையை அநுபவிப்பதாயும் அமையும்,

உ+ம்:—

இருளில் இருளாகி எல்லிடத்தில் எல்ஆம்
பொருள்கள் இலதோ புவி.

திருவருட். 2ம் அதி. 8ம் செய்.

[இருளோடு கூடி இருளாகியும் ஒளியோடு கூடி ஒளியாகியும் சார்ந்ததன் வண்ணமாய்க் கிடக்கின்ற படிகம் ஆகாயம் கண் என்னும் உலகப் பொருள்கள் போல, உயிர் மலமாகிய அசத்தோடும் சத்தி சிவம் ஆகிய சத்தோடும் கூடி அதுவதுவாய்ச் - சார்ந்ததன் வண்ணமாய் நின்று அவற்றை அனுபவிக்கும்]

இனி, பளிங்குக் கல்லில் அதனைச் சார்ந்து நின்ற பொருளின் நிறத்தையும், அப்பொருள் அதிற் சாராத போது அப்பளிங்கின் இயல்பான நிறத்தையும், தனது ஒளியாகிய நிறத்தையும் சூரியன் விளக்கும் என்பதும்; அங்ஙனமே சிவசத்தியும் ஆன்மாவை மும்மலங்களோடு பொருந்த நிறுத்திப் பாச ஞானத்தையும், அவை

ஒளித்து நின்றவழி (ஆன்மா தன்னை அறிதலாகிய) பசு ஞானத்தையும், அப்பால் தன்னோடு முற்றப் பொருந்திப் பதிஞானத்தையும் உதவுமென்பதும் ஈண்டு உணரத்தக்கன.

உ+ம்,—

தன்னிறமும் பன்னிறமும் தானுங்கற் றன்மைதரும்
பொன்னிறம்போல் மன்னிறமிப் பூ.

—திருவருட். 6-ம் அதி. 5-ம் செய்]

(இ) அக்கினி தானே தனித்து நின்று எரியமாட்டாதது; விறகு முதலியவற்றையும் பிராணவாயுவையும் பற்றிநின்று இயங்குவது. அதனால், அது தானே தனித்தவொரு முதலாய் நிற்கமாட்டாததாயிற்று. அதுபோல, ஆன்மாவும் உடம்பு முதலிய கருவிகளையும் (உயிர்க்கு உயிராய் நிற்கும்) திரோதான சத்தி திருவருட் சத்தி (சிற்சத்தி)களையும் பற்றி நின்று பெத்தம் முத்தியாகிய இருவேறு நிலைகளிலும் இயங்குவதனால் அது தனி நின்று வாழும் முதலன்று.

(ஈ) ஆன்மா உருவமாகிய அசத்தோடு சேர்ந்து அதுவேயாய் அதனை அறிந்தும், அருவமாகிய சத்தோடு சேர்ந்து அதுவேயாய் அதனை அறிந்தும் நிற்பது. அங்ஙனம் ஆன்மா உருவம் அருவம் இரண்டினையும் தன்னின் வேறாகப் பொருந்தி நின்று அறிதலால் அவ்வான்மா (உருவமும்) அசத்தும் அன்று; (அருவமும்) சத்தும் அன்று; அவற்றின் வேறுபட்டதொரு பொருளாம். அதனால் அது சதசத்து எனப்பட்டது. அது, அசத்து சத்து என்னும் இரண்டினையும் போல விளங்கித் தோன்றி அவற்றோடு ஒப்ப நில்லாததாய், விளங்காததொரு சூனியம்போல நிற்பது மற்றதாய், மலரினிடத்துள்ள மணம் உருவமும் அருவமுமற்று அம்மலரினிடத்து அடங்கித் தோன்றுவது போல அசத்திலும் சத்திலும் சார்ந்ததன்வண்ணமாய் நின்று அடங்கித் தோன்றுவதோர் இயல்பினை உடையதாம்.

[உ+ம்:—

அருவுருவந் தானறித் லாயிழையா யான்மா
அருவுருவ மன்றுகு முண்மை — யருவுருவாய்த்

தோன்றியுட னில்லாது தோன்ருது நில்லாது
தோன்றன் மலர்மணம்போற் றேக்கு;

—சிவஞா. போ 7-ம் சூத். 3-ம் செய்.]

4. இருளாம் வெளி:—

மாயை கன்மம் ஆணவம் என்பவற்றைப் பொருந்தி அவற்ருல் வரும் பயனை ஆன்மா அனுபவித்து நிற்கும் நிலை சகல நிலையாம். சகல நிலைக்கு வெளி என்றும் தீபம் (விளக்கு) என்றும் ஒளி என்றும் பெயர். மாயையானது ஆன்மா கன்மபலன்களை அனுபவித்தற்கும், அதனுல் அவ்வான்மாவின் ஆணவ மறைப்பைக் குறைத்து அதன் அறிவைச் சற்றே விளக்கஞ் செய்தற்கும், 'விடிவாம் அளவும் விளக்குப்'போல நின்று உதவுதலினுல் சகலநிலை வெளி எனவும் ஒளியெனவும் விளக்கெனவும் வழங்கப்படுவதாயிற்று. இங்ஙனம் அறிவு விளக்கமடைந்துவரும் சகல நிலையிலும் ஆன்மா ஆணவ மூனைப்பு முற்றிலும் நீங்கப்பெருமல் சிற்றறிவும் சிறு தொழிலும் உடையதாய் நிற்றலின் இச் சகல நிலையை(யும்) * 'இருளாம வெளி' என அடைகொடுத்து ஓதினர்.

*"சகலத்திலே அஞ்ஞானமாகிய மாயாபோகத்தைப் புசிப்பிக்குமல்லாமல் ஞானத்தினை உணர்த்தாது. ஞானம் சுத்தத்திலேயல்லாமல் உண்டாகாது ஆகையால் சகலமும் போகத்தைப் புசிப்பிக்கிற நிமித்தமாகக், கேவலத்திற்கு இது தீபமென்றும் வெளியென்றும் சொன்னதல்லாமல், இதுவும அஞ்ஞானமேதப்பாது."

இருளாம் வெளி என்ற தொடர் இருள் ஆம தன்மையையும் உணர்த்தி நின்றது. இருளாநதன்மை என்றதனுல் ஆணவமலம் உயிரோடு கலந்து நின்று அதன் அறிவு இச்சை செயல்களை மறைக்கும் என்பதும், வெளியாந்தன்மை என்றதனுல் (அங்ஙனம் மறைத்து நிற்பினும்) மாயை தனு கரண புவன போகங்களாய் உயிருக்கு வேருய் நின்று அதன் அறிவு இச்சை செயல்களை விளக்கும என்பதும் உணர்த்தப் பட்டன.

உ+ம்:—

*விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து.

—திருவருட். 3-ம் அதி. 10-ம் செய்

[விளக்கு விடியும்வரை கண்ணுக்குப் பொருள்களைக் காட்டுவதுபோல, மாயை திருவருட்சத்தியாகிய ஒளி தோன்றும் வரை உலகம் உடல் கருவிகளாய் நின்று, வினைக்கு ஈடாக உயிரின் அறிவு இச்சை செயல்களை விளக்கும்.]

*புகலுமல மொழித்தற்குக் கலாதிமுதன் மாயை
பொருந்தியிடு மரனருளாற் போதந்தீபஞ்
சகலமேலா முடனுய வாறு போலுங்
தருமருளை மலமுயிர்கள் சாராமன் மறைக்கும்
இகலிவரு மிவையுணரி னிருள் வெளியாந் தன்மை
யெய்துமவகை தன்செய்தி யிலங்கு விந்து
பகர்வரிய வுணர்வாகி யொளியா யுள்ளப்
பான்மையினு லொருநாதம் படருந் தானே.

—சிவப். 87-ம் செய்.

[" ஆணவமல மறைப்பை நீக்குதற்பொருட்டுச் சிவத்தின் அருளினலே சுத்தமாயா காரியமான வாக்குக்களும் கலையாதி தத்துவங்களும் ஆன்மாவை வந்து பொருந்தும். தீபமானது அதைச்சேர்ந்த தண்டு தகழி நெய் திரி முதலிய பகுதிகள் எல்லாவற்றுடனுங் கூடிப் பிரகாசித்து எரிவதுபோல ஆன்மாவினறிவு இவ்வாக்குககளோடும் தத்துவங்களோடும் கூடி விளக்கமுறும். அவ்வாறு வாக்குககலை முதலியவற்ருல் அறிவைத் தருகின்ற திருவருளை ஆன்மாக்கள் அறிந்து பொருநதாத படி ஆணவமலம் மறைத்து நிற்கும். இங்ஙனம மாறுபட்டுவரும் மலமாயைகளின் இயல்பை அறியுமிடத்து இருளும் ஒளியும் போன்ற தன்மையுடையனவாம். ஆன்மா அறிவைப்பொருந்தும் முறையும் அம்மாயா காரியங்களின் செயலும் என்னவெனில், மூலாதாரத்தில் விளங்கும் விந்து தத்துவத்திலிருந்து சொல்லுதற்கரிய ஞானமாத்திரைக்கு ஏதுவாகியும் பரசரீரத்தினுள்ளாகப் பிரகாசமாய் விளங்கியும் ஆன்மா அறியும் அறிவுக்கீடாக ஒப்பற்ற சூக்குமை வாக்குத்தோன்றி உந்தித்தானத்திற்குச் செல்லும்.]

## 5. இரவு:

இரவு என்றது கேவலநிலை. ஆன்மா தனு கரண புவன போகங்களிலே பொருந்தாததாய். பேரிருளில் அலர விளித்த விழிபோல ஆணவமலம் ஒன்றினு

லேயே பீடிக்கப்பட்டதாய், - அம்மலமேயாய், - அறிவு இல்லாததாய் இருப்பது கேவல நிலையாம்.

உ+ம்:—

*ஓங்கிவரும் பலவுயிர்கண் மூன்றவத்தை பற்றி
யுற்றிடுங்கே வலசகல சுத்தமென வுணர்வர்
ஈங்குவருங் கலாதியோடு குறியுருவ மொன்று
மின்றிமல மன்றியென்று மில்லையெனு மியல்பாய்
ஆங்கறிவை யறிவரிதா யறிகருவி யணையா
வாதலின *விருண்மருவு மலர்விழிபோ லதுவாய்
நீங்கும்வகை யின்றிநித்த வியாபகமா யங்க
ணிற்பதுகே வலமென்று நிகழ்த்து நூலே.

—சிவப். 33-ம் செய்,

[பக்குவத்தினாலே உயர்ந்து வரும் எண்ணில்லாத உயிர்களும் மூன்று அவத்தைகளைப் பொருந்தி நிற்கும். அவற்றைக் கேவலாவத்தை சகலாவத்தை சுத்தாவத்தை என்று அறிஞர் சொல்லுவர். அவற்றுட் கேவலாவத்தையாவது இச்சகலாவத்தையில் நிகழும் கலையாதி தத்துவங்களும் பரவுடம்பு சூக்குமவுடம்பு தூலவுடம்புகளுமின்றி ஆணவமலம் ஒன்றேயன்றி வேறொன்றும இலலை என்னும் தன்மையுடையதாய், அறிதற் கதுவாகிய கருவிகள கூடா ஆகலாலே அவ் விடத்தே ஒரு பொருளையும் அறியக்கூடாததாய், இருளைப் பொருந்திய விழுதத கண்போல அமமலவிருளிலே அழுந்தி, அதனை விட்டு நீங்கும் வகையின்றி, பிறப் பிறப்பும் ஏகதேசத்தன்மையுமின்றி, ஆணவ மலத்தோடு மாத்திரம் கூடி நிற்பதென்று ஆகமங்கள் சொல்லும்]

"*இருண்மருவும் அலர்விழிபோல் அதுவாய்:—

கண் ஒன்று; அதன் ஒளி ஒன்று; ஒளிக்குக்காணுங் குணம் ஒன்று; காணுங் கொழில் ஒன்று; கண் இருளோடு கூடிய பொழுது விழித்திருப்பினும், இருள் மறைப்பால் ஒன்றையும் காண்பதில்லை. இதனால் கண்ணுக்காதல் அதன் ஒளிக்காதல் ஒளியின் காணுங் குணத்துக்காதல் ஒரு கேடில்லை. காணுந் தொழிலொன்றே அவ்விருள் மறைப்பினால் நிகழவில்லை. அது போல, ஆன்மாவுக்காவது ஆன்ம அறிவுக்காவது அவ்வறிவின் அறியுங் குணத்துக்காவது யாதொரு

கேடின்றி, அது மலமறைப்பினுல் அறியுந்தொழில் நிகழாமல், மறம் என்றும் தான் என்றும் பிரிப்பின்றி அம்மலவாருளில் அழுந்தியிருக்கும், அதுவாங் - ஆணவ மலத்தோடு அம்மல மாத்திரையாய் இருத்தல்"

—சிவப். உரைக்குறிப்பு - திருவிளங்கம்.

+ கேவல சகல சுத்தம் என்றமூன் றவத்தை ஆன்மா
மேவுவன் கேவ லந்தன் உண்மைமெய் பொறிகள் எல்லாங்
காவலன் கொடுத்தபோது சகலனும் மலங்கள் எல்லாம்
ஓவினபோது சுத்தம் உடையன்உற் பவந்து டைத்தே.

—சித்தி, 4-ம் சூத். 37-ம் செய்.

* அறிவிலன் அமூர்த்தன் நித்தன் அராகாதி குணங்க ளோடுஞ்
செறிவிலன் கலாதி யோடுஞ் சேர்விலன் செயல்கள் இல்லான்
குறியிலன் கருத்தா அல்லன் போகத்திற் கொள்கை யில்லான்
பிறிவிலன் மலத்தி னேடும் வியாபிகே வலத்தி லான்மா.

—சித்தி, 4-ம் சூத். 38-ம் செய்.

[+ ஆன்மா, கேவலம் சகலம் சுத்தம் என மூன்று அவத்தை எய்துவன். அவற்றுட் கேவலமாவது தன் இச்சா ஞானக் கிரியைகளின் நிகழ்ச்சி சிறிதுமின்றித் தன்மாத்திரையே உளனுதலாம். பின்பு தனுகரணுதியோடும் முதல்வன் கூட்டக்கூடி அவை ஒருபுடை விளங்கும அவதரத்திலே சகலனும, அதன்பின்பு பஞ்ச மலங்களும் நீங்கிப் பிறவி ஒழிந்து சிவத்தோடு கூடி அவ் இச்சாஞானக் கிரியைகள் எங்கும் வியாபித்து விளங்கும் அவதரத்திலே சுத்தமுடையனும்.

* ஆன்மா உடம்பு முன் இல்லாதவனும், கலாதி அறிவோடு முன் சேர்தல் இல்லாதவனும், புத்தி குணம் எட்டினையும (ஏனைப்போக்கிய காண்டக கருவிகளையும) முன் பொருந்தாதவனும், இச்சை முன் இல்லாதவனும், அறிவு முன் இல்லாதவனும, ஒரு தொழிலும் முன் இல்லாதவனும், தனக்கென ஒரு சுதந்திரம் முன் இல்லாதவனும, போகத்தில் முன் கொள்கை இல்லாதவனும், தோற்றக்கேடுகள் முன் இல்லாதவனும், ஏக தேசியாதல் முன் இல்லாதவனுமாய் கேவலாவத்தையில் ஆணவமலத்தோடு மாத்திரையே கூடி நிற்பன்.]

வாக்காலு மிக்க மனத்தாலு மெக்காலுந்
தாக்கா துணர்வரிய தன்மையனை — நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்குமரு ணல்கக் கொடி. 3,

கொண்டுகூட்டு: எக்காலும், வாக்காலும் மிக்க மனத்தாலும் தாக்காது உணர்வு அரிய தன்மையனை (-அவனது நிலையை) பிறித்து, நோக்கி (அங்ஙனம நோக்குமிடத்து அத் தன்மையன்) அறிவு தம்மில் பிரியாமை தானே அருள் நல்க, குறிக்கும் கொடி (கட்டினேன்).

அருஞ்சொற்பொருள்: வாக்கு - சொற்பிரபஞ்சம் (-பாச ஞானம்), மனம் - ஆன்மஞானம்; தாக்காது - எட்டப்படாமல்; பிறித்து - பகுத்து, வேருக எடுத்து; அறிவு தம்மில்- அறிவு ஆதாரமான ஆன்மாக்களிடத்தில்.

பொருள்: எக்காலத்திலும் பாச ஞானத்தினுலும் (அதிற்) சிறந்த பசுஞானத்தாலும் எட்டப்படாமல், அறிதற்கரிதாய் நின்ற தன்மையை உடைய சிவனை (-அவனது நிலையை) வேருக எடுத்து, ஆராய்ந்து பார்க்குமிடத்து (அச் சிவன்) அறிவாதாரமான ஆன்மாக்களோடு (அறிவுக்கறிவாய்ப்) பிரியாமற் கலந்து ஒன்ருய் இருத்தலையே திருவருள் (பற்றுக்கோடாக வருகின்ற பதி) ஞானந் தந்துதவும் பொருட்டு (உலகத்தவர்களுக்கு) விளக்குவதாகிய கொடியைக் கட்டினேன்.

குறிப்பு:-

(அ) "வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும் தாக்காது உணர்வரிய தன்மையன்" :—

வாக்கு, ஆன்மாக்கள் பொருந்தும் மூவகை ஞானங்களுள் பாச ஞானத்தைக் குறித்து நின்றது. வாக்குகள் நான்கு. அவை: சூக்குமை பைசந்தி, மத்திமை, வைகரி, என்பன. இந் நான்கு வாக்குக்களும் சொற்பிரபஞ்சம் எனப்படும. பிருதிவிமுதல் நாதமீருயஎனைய முப்பத்தாறு தத்துவங்களும் பொருட் பிரபஞ்சம் எனப்படும். இந்த இருவகைப் பிரபஞ்சங்களையுமே ஆன்மா பொருந்தி நிற்குங்கால் அவைபற்றுக்கோடாக அதற்கு உண்டாகும் ஞானம் பாசஞானமாக அவ்விருவகைப் பிரபஞ்சத்துள்ளும் சொற்பிரபஞ்சத்தைச்

சுட்டும் 'வாக்கு' என்பதை மாத்திரங் கூறியது. சொற் சுருக்கம்பற்றியென்க. அவாய் நிலையாற் பொருட்பிர பஞ்சத்தையும் உடன்கொண்டமைக. பாசஞானம் என்றது பாசங்கள் வாயிலாக ஆன்மாவுக்கு உளதாகும் சுட்டுணர்வாகிய ஏகதேச ஞானத்தையாம். பாசங்கள் நிலைபேறற்ற அசத்தாதலின் அப்பாசங்கள் வாயிலாக அறிந்த சுட்டுணர்வால் நிலைபேறுடையதும் சுட்டியறியப்படாததுமாகிய சிவத்தை எஞ்ஞான்றும் அறிய வொண்ணுதாம்.

மனம் பசு ஞானத்தைக் குறித்து நின்றது. பசு ஞானம் என்பது 'நான் பிரமம்' என்ற ஞானத்தையாம். அது பாசங்களினின்றும் நீங்கி, ஆன்மாவாகிய தான் என ஒன்று உண்டு எனக்கண்டு, அநாதிமுத்த சித்துருவாகிய சிவம்போல "நானும் ஒரு பிரமம் ஆவேன்" என்னுஞ் செருக்கோடு நிற்கும் நிலையாம்.

அசத்தாகிய பாசங்களால் வரும் பாச ஞானமும் தன்னை உணர்த்துமாயினும் தான் என்னுஞ் செருக்கால் தன் முதலை உணரவிடாது ஐயப்பாட்டை உண்டாக்கும் பசுஞானமும் சத்தாகியசிவத்தை எவ்வகையானும் எஞ்ஞான்றும் உணர்த்தமாட்டா. ஆகவே, இவ்விருவகை ஞானத்தாலும் எக்காலத்தும் அவனை எட்டி அறிய முடியாது எனபார், "வாக்காலும் மிக்க மனத்தாலும் தாக்காது உணர்வரிய தன்மையன்" என்றார் என்க.

பாசஞானம்போல் பசுஞானம் அதிக மயக்கஞ் செய்யாமையானும் ஆன்மாவாகிய தன்னை ஒருவாறு உணர்த்துதலானும் அவ்விருவகை ஞானத்துள்ளும் பசு ஞானம சற்றே சிறந்ததென்பர், "மிக்க (சிறந்த) மனத்தாலும்" என்றார் எனக்கொள்க. இனி, ஈண்டுக் கூறிய உண்மைகளை மேல்வருஞ் செய்யுள்களானுணர்க,

"மறையினன் அயனன் மாலான் மனத்தினன் வாக்கான் மற்றுங்
குறைவிலா அளவினுலுங் கூறெணுதா கிநின்ற
இறைவனர் கமலபாதம் இன்றுயான் இயம்பும் ஆசை
நிறையினர் குணத்தோர்க் கெல்லாம நகையினை நிறுத்துமன்றே"
—சிவ சித். பாயி செ. 4.

பாசமா ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும்
ஈசனை யுணர வொண்ணு திறையருண் ஞான கண்ணின்
தேசுறு மதனன் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து
நேசமோ டியர்ப ரத்து நிற்பது ஞான நிட்டை.
—சிவப்பிரகாசம், செய். 64.

ஆ. 'பிறித்து நோக்கி'(ப் பார்த்தல்):

இறைவன் பாசஞான பசுஞானங்களுக்கு எட்டாதவனுக, அத்தகைய தன்மையனைப் பிறித்து நோக்கிப் பார்த்தல் (-பாசம் பசு என்பவற்றின் வேறாக எடுத்து ஆராய்ந்து பார்க்குமியல்பு) ஆன்மாவுக்கு யாங்ஙனம் கைகூடும்? எனின், அஃது ஆசாரியரது தீட்சைக் கிரமங்களினுலே கைகூடும் என்க.

பதி பசு பாச இயல்புகளைப் பகுத்து உணர்தற்குத் திருவடி ஞானம் வேண்டும். ஞானம: ஓதல் ஓதுவித்தல் கேட்பித்தல் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடல் என எழுவகைப்படும். இவற்றுள் முதல் மூன்றும் வருவது அபரஞானமாம். அபர ஞானத்தால் பதமுத்தியே சித்திகரும். பதமுத்தியடைந்த ஆன்மா அம்முத்தி அநுபவ முடிவிலே முன்னைத்தவ விசேடத்தால் ஆசாரியரது அநுக்கிரகத்தைப் பெறும்; ஆசாரியரது தீட்சைக்கிரமங்களினுலே பசுகரணங்களெல்லாம் சிவகரணமாகிப், பாசஞான பசுஞானங்கள் ஒழிந்து, முன்னிருந்த நினைவு வேறுகி, அவ்வாசாரியரது உபதேசத்தைக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் பின் நிட்டைகூடல் என்பவற்றைப்பொருந்தி, உண்மை ஞானமெய்தி, 'அந்த ஞானம பற்றுக் கோடாகப் பதி பசு பாசங்களின் இயல்புகளை அப் பக்குவான்மா உள்ளவாறு தனித்தனி பகுத்துணரும். (-பிறித்து நோக்கிப் பார்க்கும்) இதற்கு உதாரணம் வருமாறு:-

'வானேன் பவனி வரக்கண்டு வல்வினையே
னேனேரு மேத்துதல்கண் டேத்தினேன்—தானென்னைப்
பார்த்தான்; பழையவினைப் பஞ்சமலக் கொத்தையெல்லாம்
நீத்தான்; நினைவுவே றுக்கினுன்.—....'

(நெஞ்சுவிடுதூது - குரு உபதேசம் - 89—90)

இ. "அறிவு தம்பிற் பிரியாமைதானே குறிக்கும் அருள்":

ஆசாரியரிடத்துக் கேட்டலினுலே பதிபசு பாசங்களின் இயல்புகளைத் தனித்தனி அறிதலாகிய ஞானமும், ஆசாரியரது உபதேசத்துக்கு அநுகூலமான அளவைகளால் சிவத்தைச் சிந்தித்தலினுலே பதி பசுக்களின் கலப்பு

நிலையை அறிதலாகிய ஞானமும், சிந்திக்கப்பெற்ற சிவத்தைத் தெளித்தலினாலே அச்சிவம் தன்னறிவில் விளங்கிப் பற்றற்று நின்ற நிலையை உணர்த்தலாகிய ஞானமும் இறைவனைப் பரிபூரணமாய் அநுபவித்தற்கு உதவும ஞானங்களாகா. அவை பாவனை ஞானங்கள் எனப்படும். இவை அனைத்துக்கும் மேலாய் இருப்பது சிவஞானம். (-பதி ஞானம்) ஒன்றேயாம். அஃது நிட்டை கூடலாற் பெறப்படும் அநுபூதிஞானமாம். இந்த அநுபூதி ஞானம், தான் வேறு அவன் வேறு எனாத நிலையில் — அறிவு தம்மிற் பிரியாத நிலையில், அத்துவிதக் கலப்பாம் பேரின்ப அநுபவம் ஒன்றே நல்கும் திருவருள்ஞானமாதலால் அதனை: "அறிவு தம்மிற் பிரியாமை தானே குறிக்கும் அருள்." என்றார்.

இதற்கு உதாரணம் வருமாறு:—

"பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தார் பரமே
பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார், பார்க்க

வருஞானம் பலஞானம் அஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கந்
தருஞானம் போகஞா திருஞான, ஞேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகுந்;
தீருஞானம் இவையெல்லாங் கடந்தசிவ ஞானம்
ஆதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்."

(சித்தி. சூத். 11—செய். 2)

ச; "அருள் நல்கக் கோடி" (கட்டினோம்);-

"ஆசாரியரது அநுக்கிரகம பெற்று நிட்டைகூடல் ஆகிய அநுபூதியினாலே திருவருள் பக்குவான்மாவை இறைவனோடு இரண்டறக்கலப்பிக்கும்; இவ்வழியானன்றி எவ்வகையாலும் முத்தி சித்தி யாது என்பதை உணர்த்த இக்கொடியை ஏற்றிக் கட்டினோம்." என்னும் கருத்தமைய "அருள் நல்கக் கொடி (கட்டினோம்.)" என்றார் என்க.

x x x

முத்திநிலையில் சிவமும் ஆன்மாவும் சேர்ந்து நின்ற நிலைக்கு உவமைகள்:—

1. சிவம் ஆன்மாவைச் சேர்த்துக்கொள்ளுமாறு:-
* "இரச குளிகை பொன்னைத் தனக்குள்ளே சேர்த்துக் கொள்ளுதல்"

2. சிவம் ஆன்மாவைத் தானாக்குமாறு:-

* "அக்கினி இரும்பைத் தானாக்குதல்"

3. ஆன்மாவைச் சேர்த்துப் பின் விடாமை:-

* "காந்தம் இரும்பைச் சேர்த்துப் பின் விடாதிருததல்"

4. சிவம் ஆன்மாவின் பலத்தைப் போக்கித் திருவடியிலே சேர்த்தல்:-

* அக்கினி இரும்பைக்கெடுத்துத்தன்னுடு சேர்த்து நிற்றல்.

* ஆதவன் அந்தகாரத்தைக் கெடுத்து நிற்றல்.

5. ஆன்மா சிவனைப் பொருந்திச், சிவனேயாய், நீங்காமலிருத்தல்:-

* குளத்து நீர், அணையை உடைத்துச் சென்று, சமுத்திரத்திலே சேர்ந்து, சமுத்திரசலமேயாய், அச்சமுத்திரத்தை விட்டு நீங்காதிருத்தல்.

இவற்றுக்கு உதாரணங்கள்;-

"இரும்பைக்காந் தம்வலித்தாற் போலியைந்தங் குயிரை
எரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னாக்கி
அரும்பித்திந் தனத்தையனல் அழிப்பதுபோன் மலத்தை
அறுத்தமலன் அப்பணைந்த உப்புப்போ லணைந்து
விரும்பிப்போன் னிணைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையோத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே."
(சித்தி. சூத். 11. செய். 12)

"மன்னு மிருளை மதிதுரந்த வாறன்பின்
மன்னு மரனே மலந்துரந்து — தன்னின்
வலித்திரும்பைக் காந்தம் வசஞ்செய்வான் செய்தல்
சலிப்பில் விகாரியலன் றான்."
(சிவஞானபோதம் - சூத். 11. செய். 4)

நசித்தோன்றி னுள்ளம் நசித்தலா லொன்று
நசித்திலதே லொன்றுவ தில்லை — நசித்துமல
மப்பணைந்த வுப்பி னுளமணைந்து சேடமாங்
கப்பின்று மீசன் கழல்.
(சிவஞானபோதம் - சூத். 11. செய். 5)

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற் நீர்ந்து — சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலைவிரான் பாதத்தை யுற்று.
(சிவஞானபோதம் - சூத். 8, செய். 7)

4. அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் — நெஞ்சழுத்திப்
பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி

கொ - கூ:- அஞ்சு எழுத்தும், எட்டு எழுத்தும் ஆறு எழுத்தும் நாலு எழுத்தும் (விதிப்படியே உச்சரித்து,) பிஞ்சு எழுத்தும் (அதனால் எய்தற்குரிய) மேலைப் பெரு எழுத்தும் நெஞ்சு அழுத்தி (நின்றால்) பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும் கூசாமல் (காட்டும; இவ் வுண்மையைக்) காட்ட (நான்) கொடி (கட்டினேன்,)

பொருள்:- ‘சிவய நம’ என்னும் ஐந்து எழுத்தும், ‘ஓம் ஆம் ஔம் சிவயநம’ என்னும் எட்டு எழுத்தும், ‘ஓம் நமசிவய’ என்னும் ஆறு எழுத்தும், ஓம் சிவய’ என்னும் நான்கு எழுத்தும்என இங்ஙனம் கூறப்பட்ட எழுத்துக்களை விதிமுறை தவறாமல் (முதலில்) உச்சரித்து, அதனால் ஐந்து எழுத்தின் சொரூபத்தை அறிந்துகொண்டு, பின் உச்சரிக்கும் முறையைவிட்டு, பிஞ்சு எழுத்து எனப்படும் வகாரமாகிய சிவ சத்தியையும், (அச்சத்தியினால் எய்தற்குரிய அநாதி மலமுத்த சித்துருவாம்) சிகாரமாகிய சிவத்தையும், ஒருவர் தமது சித்தத்திலே அழுந்த நிறுத்தி வைப்பின், (அங்ஙனம் செய்வதனால்) பேசும் எழுத்தாகிய வகாரம் என்னும் சிவ சத்தி தன்னையுங் காட்டித் தன் துணையால் அடைதற்குரிய பேசா எழுத்து என்னும் சிகாரமாகிய சிவத்தையும் ஆன்மாவுக்குத் தரிசிப்பித்துக் கூசிப் பின்னடைதலின்றி (-இலகுவாக) இரண்டறக் கலப்பிக்கும் என்பதை விளக்க, இக் கொடியை நான் உயர்த்திக் கட்டினேன்.

ஓம், ஆம், ஔம் என்பன ஓர் எழுத்து நீர்மைய. பிஞ்சு எழுத்து, பேசும் எழுத்து என்பன அருட்

சத்திக்கும் பெருவெழுத்து பேசாவெழுத்து என்பன சிவத்துக்கும் மந்திர சாத்திர பரிபாஷைப் பெயர்களா யமைந்தன,

குறிப்பு:—

1. திருவைந்தெழுத் துண்மை:

இறைவன் அருளிய வேதம் ஆகமம் என்பனவும், அவனருள் வழிப்பட்ட சான்றோர் அருளிய புராணம் முதலியனவும் திருவைந்தெழுத்தின் உண்மையை உரைப்பன. பெத்தம் முத்தி ஆகிய இருவேறு நிலை களிலும் (நிற்கும்) ஆன்மாவின் நன்மைகருதி இறை வன் கொள்ளுகின்ற திருமேனி இயல்பும், செய்தருளு கின்ற ஊன நடம் ஞானநடங்களின் முறைமையும், அவற்றின் பயனுய் ஆன்மா பெறும் அனுபவங்களும், முடிந்த முடிபாய் அதற்குக் கிடைப்பதாகிய முத்தியும், இருவேறு நிலைகளிலும் முப்பொருள் நிற்கும் முறைமை யும் இன்னோரன்ன பிறவும் திருவைந்தெழுத்தினுள் அடங்கி நிற்கும் என்ப. இவற்றுக்குச் சான்று:

"வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே".

(தேவாரம்)

"அரு ணூல மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூல் தெரியப் புகும்"

(திரு. அரு. ப, அதி 9 செ 1)

"அஞ்செழுத்தே யாகமமு மண்ண லருமறையும்
அஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்தும் — அஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் யாவைக்கு மப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்.

(உண்மை விளக்கம். செய்)

"எட்டு மிரண்டும் உருவான லிங்கத்தே
நட்டம் புதல்வா வவிலக் கேள் — சிட்டன்
சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ் சாலே
அவாயமற நின்றாடு வான்.

(உண்மை விளக்கம் செய்)

இறைவனது திருமேனி பஞ்சாக்கரமாகுமாறு:-

நமசிவய என்னும் தூல பஞ்சாக்கரத்தில் வரும் நகாரம் திருவடியாகவும், மகாரம் திரு வயிறாகவும், சிகாரம் திருத்தோளாகவும், வகாரம் திருமுகமாக

வும், யகாரம் திருமுடியாகவும் பொருந்த நிற்பது பஞ்சாக்கரத் திருமேனியாகும்.

(உண்மை விளக்கம் "ஆடும்படிகேள்" – 32ம் செய் பார்க்க)

**இறைவனது அவயவங்கள் பஞ்சாக்கரமாகுமாறு:-**

சிவய நம என்னும் சூக்கும பஞ்சாக்கரத்தில் வரும் சிகாரம் உடுக்கினை ஏந்திய திருக் கரமாகவும், வகாரம் வீசிய திருக்கரமாகவும், யகாரம் அபய கரமாகவும், நகாரம் அக்கினியேந்திய திருக்கரமாகவும், மகாரம் முயலகனை அழுத்தி நிற்கும் திருவடியாகவும் இறைவன் பொருந்தி நிற்பன்.

(உண்மை விளக்கம் "சேர்க்குந்துடி" –33ம் செய், பார்க்க)

**பஞ்சாக்கரத்திருமேனி கொண்டு இறைவன் செய்யும் ஊன நடனம்:—**

உடுக்கு ஏந்திய திருக்கரம் படைத்தல் செய்யவும், அஞ்சலெஎன அமைத்த திருக்கரம் காத்தல் செய்யவும், அக்கினி ஏந்திய திருக்கரம் அழித்தல் செய்யவும், ஊன்றிய திருவடி மறைத்தல் செய்யவும், தூக்கிய திருவடி அனுக்கிரகஞ் செய்யவும் (ஆக, இங்ஙனம் பஞ்சகிருத்தியமும் நடைபெறுமாறு) இறைவன் ஊன நடனம் செய்தருளுவன் (உண்மை விளக்கம் "தோற்றந்துடி" 35ம் செய். பார்க்க) இது பெத்த நிலையில் இருக்கும் ஆன்மாவுக்கு இறைவன் உதவும் முறைமையாகும்.

**பஞ்சாக்கரத் திருமேனி கொண்டு இறைவன் செய்யும் ஞான நடனம்:—**

உடுக்கு ஏந்திய திருக்கரம் மாயையை நீக்கவும், அக்கினி ஏந்திய திருக்கரம் கன்ம மலத்தைத் தகிக்கவும், ஊன்றிய திருவடி மலம் மேலிடாமல் அழுத்தவும், தூக்கிய திருவடி ஆன்மாவை மேலெடுத்துத் திருவருளை அதற்குத் திருமேனியாக நல்கவும், கிருபை பொருந்த அஞ்சலெஎன அமைத்த திருக்கரம் முத்தியாகிய ஆனந்த வெள்ளத்தில் அழுத்தவும், நின்று இறைவன், ஞானநடனஞ் செய்தருளுவன். (உண்மை விளக்கம் "மாயைதனை உதறி" - செய். 36.) இதனால் இறைவன் முத்திநிலையில் ஆன்மாவுக்கு உதவும் முறைமை கூறப்பட்டது.

பஞ்சாக்கரத் திருநடனங்களின் பயன்:-

பரையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்
உரையுணர்வுக் கெட்டா வொருவன் — வரைமகள்தான்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு.

(உண்மை விள. செய். 38.) என்பதனைல் பிறப் பறறுத்து அந்தமிலின்பத் தழிவில் வீடெய்துதலே பஞ்சாக்கரத் திருநடனப் பயனுயமைவது காண்க.

## 2. திருவைந்தெழுத்தின் பொருண்முறைமை:-

'சிவய நம' என்னுந்திருவைந்தெழுத்தில் சிகாரம் சிவத்தையும் வகாரம் அருட் சத்தியையும் யகாரம் ஆன்மாவையும் நகாரம் திரோதான சத்தியையும் மகாரம் மலத்தையும் குறிப்பன. இதனை "ஈசன் அருள் ஆவி எழிலார் திரோதம் மலம் ஆசு இல் எழுத்து அஞ்சின் அடைவாம்". (உண். விள. செய். 40) என்பதனுலும் அறிக.

'ஓம்' என்னும் பிரணவ மந்திரமும் ஐந்தெழுத்துப் பொருண் முறைமையினை உடையதென்றும், அது சூக்குமமாய் அமையப்பெற்றதென்றும், அதில் பொருந்திய நாதம், விந்து, மகரம், உகரம், அகரம் என்பன முறையே சிவம், அருட்சத்தி, மலம், திரோதானசத்தி, ஆன்மா என்னும் பொருளமைவை உடையன வென்றும் கூறுப. இதனை "இறை சத்தி பாசம் எழில் மாயை ஆவி உறநிற்கும் ஓங்காரத்துள்" (திரு அரு. பய. அதி 9. செய் 2) என்பதனுனும் உணர்க. இனி, ஓங்காரம் இறைவனது பஞ்சாக்கரத் திருவுருவில் திருவாசியாகவும், அதிற் பொருந்திய அக்கரங்கள் உள் ஒளியாகிய சுடர்களாகவும் அமைந்திருக்குமென உண்மை விளக்கம் (செய் 34) உரைப்பதுவும் ஈண்டுணரத்தக்கது.

## 3. திருவைந் தெழுத்தின் வகை:

ஆன்மாக்களின் பக்குவ நிலை வேறுபாடுகளுக்குத் தக அவை செபித்தற்குரிய திருவைந்தெழுத்துக்களும் வகைப் படுத்தப்பட்டுள. அவை: தூல பஞ்சாக்கரம், சூக்குமபஞ்சாக்கரம், அதி சூக்கும பஞ்சாக்கரம், சூக்குமோ சூக்கும பஞ்சாக்கரம், மகாமனு என்பன.

தூல பஞ்சாக்கரம்: திரோதான சத்தியாகிய நகாரமும் மலமாகிய மகாரமும் முதலாக, ஆன்மாவாகிய யகாரம் இறுதியாக ஓதப்படுவது; சமயாசார வன்மானுட்டானங் களுக்குரியது. இதற்கு உபாயமார்க்கத்தார் அதிகாரிகளாவர். முத்தியில் விருப்பமுடைய உண்மை மார்க்கத்தாருக்கு இது ஏற்றதன்று. "மாலார் திரோதம் மலம் முதலா மாறுமோ - மேலாசு மீளா விடின்" (திரு. அரு. ப அதி. 9 செய். 5.) என்பதனானும், "ஆதி மல மிரண்டும் ஆதியா வோதினல் சேதியா மும்மலமும் தீர்வாகா......." (உண். விள. செய் 43) என்பதனானும், உண்மை மார்க்கத்தாருக்கு நகாராதி பஞ்சாக்கரம் உரித்தன்றென்பது வலியுறுத்தப் பட்டமை உணரத் தக்கது.

சூக்கும பஞ்சாக்கரம்: சிகார வகாரங்கள் முதலாக, நகார மகாரங்கள் இறுதியாக யகாரம் நடுவணதாக உச்சரிக்கப்படுவது; உண்மை மார்க்கத்தாருக்குரியது. இதனை முத்தி பஞ்சாக்கரம் எனவுங் கூறுப. இப் பஞ் சாக்கரமே உண்மை மார்க்கத்தாருக்கு உரியதென்பதற்கு,

"சிவமுதலே யமாறு சேருமேற் றீரும்
பவமீது நீயோதும் படி"

(திரு, அரு, ப. அதி. 9. செய். 7)

"ஆராதி ஆதார மங்தோ வதுமீண்டு
பாராது நீயோதும் பற்று."

(திரு. அரு. ப. அதி. 9. செய்-6)

அண்ணல் முதலா வழகா ரெழுத்தைந்தும்
எண்ணில் இராப்பகலற் றின்பத்தே — நண்ணி
அருளா னதுசிவத்தே யாக்கு மணுவை
இருளா னதுதீர வின்று.

(உண்மை விள, செய். 42)

என்பன சான்றாத லுணர்க.

ஆதி சூக்கும பஞ்சாக்கரம்: சிகார வகாரங்கள் முறையே எதிர் நிரல் நிறையாகவும் யகாரம் அவற்றுக்கிடையேயும் நிற்க ஓதப்படுவது; (இதுவும் உண்மைமார்க்கத்தாருக் குரியது.) இது காரண பஞ்சாக்கரம் எனவும், முத்தி பஞ்சாக்கரம் எனவும், இருதலைக்கொள்ளி எனவும், இரு தலை மாணிக்கம் எனவும் பெயர்பெறும்.

சூக்குமோ சூக்கும பஞ்சாக்கரம்: நகார மகாரங்களாகிய திரோதம் மலம் என்பன நீங்கப்பெற்ற யகாரமாகிய ஆன்மா வகாரமாகிய திருவருட்சத்தியினுல் பீடிக்கப்பட்டு அவ்வருட்சத்தியின் வசத்ததாய் அதுவேயாய் நிறகச் சிகர மும் முன் நிற்கும்போது உளதாவதாம். (இதுவும் உண்மை மார்க்கத்தாருக்குரித்து.) இது மகா காரண பஞ்சாக்கரம் எனவும்படும்.

மகாமனு: சூக்குமோ சூக்கும பஞ்சாக்கரமாகிய சிகார வகார மிரண்டினுள், (யகாரமாகிய ஆன்மாவை அடக்கிக் கொண்ட) வகாரமாகிய திருவருட்சத்தியையும் தன்னுள் அடக்கிக்கொண்டு, சிகாரமாகிய ஓரெழுத்து மாத்திரையாய் நிற்பதாம். இதற்கு இறையெழுத்து, பெருவெழுத்து, பிரமபீஜம், நாயோட்டு மந்திரம் என்பன மறு பெயர்கள்.

4. ஓதும்முறை நெஞ்சழுத்தி நிற்கும் முறைகளால் முத்தி யெய்தும் முறை:-

சிவயநம என்னும் சூக்கும பஞ்சாக்சரம் முதல் மகா மனு ஈருகச் சொல்லப்பட்ட (உண்மை மார்க்கத்தாருக்குரிய) பஞ்சாக்கரங்கள் படிமுறையே பக்குவ முயர்ந்து செல் லும் ஆன்மாவினுல் ஓதுதற்கும் நெஞ்சழுத்தி நிற்றற்கும் உரியவை. ஓதுதல் மூவகைப்படும். அவை உரை, மந்தம், மானதம் என்பன. அருகிலிருப்போருக்குங் கேட்கும்படி ஓதுதல் உரையெனவும், தன் செவிக்கு மாத்திரம் புலனு கும்படி நா நுனி உதட்டைத் தொடாதவாறு உச்சரித்தல் மந்தம் (அல்லது உபாம்சு) எனவும், நா நுனி உதட்டைத் தீண்டாதிருக்க ஒருமை பொருந்தி நின்று மனத்திலே செபித்தல் மானதம் எனவும் சொல்லப்படும். இம் மூவ கைக்கும் அப்பாற்படச் சுத்த மானதம் எனவும் ஒருவகை யுண்டு. அது அறிவாற் கணித்தல் எனப்படும். இனி, நிற்றலாவது சூரிய வொளியும் கண்ணொளியும் ஒன்றுதலால் கண் ஒரு பொருளைக் காண்டல்போல, வியாபகமான சிவத்தில் உயிர் வியாப்பியமாய் — அடங்கி அச்சிவத்தின் வழித்தாய் நிலைத்தலாம். ஓதும் முறையும் நெஞ்சழுத்தி நிற்கும் முறையும் வேறுபடுதலின்றி ஒன்ருக நடைபெறு தல் வேண்டும். அசானுபதேசத்தின்படி, இவ் இருமுறை யுந் தவருது, உண்மை மார்க்கத்தார் சூக்கும பஞ்சாக்க ரத்தை ஓதுங்கால், திரோதான சத்தி மலத்தை நீக்கும்; மலம் நீங்கவே அத்திரோதான சத்தி அருட்சத்தியாய்மாறி

நிற்கும். இப்போது, ஆன்மா அதிசூக்கும (காரண) பஞ்சாக்கர நிலையைப் பெறும். அதன்மேல், ஆன்மா அருட்சத்தியின் வசப்பட்டு அவ் அருட்சத்தியேயாய் நிற்கும். அங்ஙனம் நிற்கும்போது அது சூக்குமமோ சூக்குமம (மகா காரண) பஞ்சாக்கர (மாகிய 'சிவ' என்னும்) நிலையை அடையும். அப்பால், சிவசத்தியுடன் ஒன்றாய் நின்ற ஆன்மா அதன் துணையால் சிவமயமாய் ஏகனாதம். இது மகாமனு (வாகிய 'சி') என்னும் பஞ்சாக்கர நிலைமையை அடைதலாம். இவ்வுண்மைகளை:

"ஆசுறு திரோத மேவா தகலுமா சிவன்முன் னாக
ஓசைகோ ளதனி னம்மே லொழித்தரு ளோங்கு மீள
வாசியை யருளு மாய மற்றது பற்று வற்றங்
கீசனி லேக மாகு மிதுதிரு வெழுத்தி னீடே"
(சிவப். செய். 92)

"ஆசினவா நாப்ப ணடையா தருளினல்
வா சியிடை நிற்கை வழக்கு"
(திரு. அரு. ப, அதி. 9 செய் 9.)

"வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு"
திரு. அரு. ப, அதி 9 செய் 8.)

எனபன கொண்டாராய்ந் துணர்க. இனி, யகாரமாகிய ஆன்மா வகாரமாகிய திருவருளோடு ஒன்றுங்கால் ஆன்ம போதமகன்ற சுத்தநிலையில் நிற்கும் என்றதற்கும், அந்நிலையில் அதனறிவும் செயலுமற்று இறைவனின் அறிவும் செயலுமேயாய் ஏகனாகி இன்பத் தழுந்தும் என்றதற்கும்

"நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே தந்தானென் றுந்தீபற"

என்னுந் திருவுந்தியார் (செய் 6, சான்றாதலு முணர்க.

**கொடிக்கவி**

**மூலமும் உரையும் முற்றிற்று.**

**உமாபதி சிவாச்சாரியார் திருவடி வாழ்க.**